ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

गन्धाढ्यां नवमल्लिकां मधुकरस्त्यक्त्वा गतो यूथिकां
तां दृष्ट्वाशु गतस्स चन्दनवनं पश्चात्सरोजं गतः ।
बद्धस्तत्र निशाकरेण सहसा रोदित्यसौ मन्दधीः
सन्तोषेण विना पराभवपदं प्राप्नोति सर्वो जनः ॥

सुभाषितरत्नभाण्डागारे ॥

ஓர் வண்டானது தானிருந்த மிகவும் வாஸனை பொருந்திய புதிய மல்லிகைக் கொடியைவிட்டு அவாவின்மேலீட்டால் அதிக மகரந்தமுள்ள வேறுஇடத்திற்குச் செல்லவேண்டுமெனக் கருதி எனுமிச்சம் பழத்தையடைந்தது. அதிலும் திருப்தி ஏற்படாமல் அங்கிருந்து புறப்பட்டு சீக்கிரமாக அருகிலுள்ள சந்தன வனத்தில் சென்றது. அங்கும் தன் ஆசைக்குற்ற மது கிடைக்கவில்லை என்று அதைவிட்டு ஸமீபத்திலுள்ள தடாகத்தில் விளங்கும் தாமரைமலரை யடைந்தது. பலவிடங்களிலும் சுற்றி ஓரிடத்திலும் திருப்தி யேற்படாமல் சாயங்கால ஸமயத்தில் பத்மத்தை யடைந்தபடியால் இது உள்புகுந்ததும் சந்திரன் உதித்ததும் சரியான ஸமயமாயிருந்தபடியால் அம்மலர் மூடிக்கொண்டது. பேராசைகொண்ட அற்பபுத்தியுள்ள இந்தப் பிரமரமானது இரவு பூராவும் அதிலிருந்து அழுது கொண்டிருந்தது. தனக்குக் கிடைத்ததைக் கொண்டு சந்தோஷமடையாமல் அதிக ஆசைகொண்டு பல விடங்களிலும் சுற்றும் மந்த புத்தியையுடைய ஜநமானது முடிவில் அவமானத்தையடைந்து அதிக கஷ்டத்திற்கும் ஆளாகுமென்பதை இந்த வண்டின் நடத்தையால் நன்கு விளக்கிக் காட்டுகிறார். ஆகையால் நாமும் எந்தெந்த ஸமயத்தில் பகவானால் நமக்கு எதெது கொடுக்கப்படுகின்றதோ அதைக் கொண்டு திருப்தி யடைந்தால் தான் சுகமாயிருக்கலாமென்று தெரிவிக்கப்படுகிறது.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.
ரக்தாக்ஷி-௵ பங்குனி-௴ ௧௫-௨

வேதாந்தஸாரம்.

(132-வது பக்கத்தொடர்ச்சி)

இதற்குப் பிறகு ஆறுவதாகக் கூறப்பட்டது சிரத்தை

गुरूपदिष्टवेदान्तवाक्येषु विश्वासः श्रद्धा ॥

மஹா குருக்களாலுபதேசிக்கப்பட்ட வேதாந்த வாக்யார்த்தங்களில் நம்பிக்கைவைப்பது சிரத்தை யாகும்.

शास्त्रस्य गुरुवाक्यस्य सत्यबुद्ध्यवधारणा ।
सा श्रद्धा कथिता सद्भिः यया वस्तूपलभ्यते ॥

சாஸ்திரம், குருவாக்கியம் இவைகளில் ஸத்யம் என்று புத்திக்கேற்படும் நிச்சயம் தான் சிரத்தை என்று மஹான்களால் கூறப்படுகின்றது. இவ்வித சிரத்தை யிருந்தால் இஷ்டஸித்தியைச் சீக்கிரம் பெறலாம். பின்னும்

श्रद्धावतामेव सतां पुमर्थः समीहितस्सिध्यति नेतरेषाम् ।
उक्तं सुसूक्ष्मं परमार्थतत्वं श्रद्धस्व सोम्येति च वक्ति वेदः ॥

"குருவாக்கியத்திலும் சாஸ்திரார்த்தங்களிலும் நம்பிக்கையுடையவர்களுக்குத் தான் எதிர்பார்க்கப்படும் புருஷார்த்தம் சித்திக்கும். மற்றவர்களுக்கு ஸித்திக்கமாட்டாது" என்கிற ஸூக்ஷ்மமான இந்தப் பரமார்த்தத்தின் உண்மையை வேதமும் கருணையால் "ஒருவனைப் பார்த்து "ஹே" ஸௌம்யா, நற்குணம் பொருந்தியவனே, சிரத்தையுடனிரு" என்று கூறுகின்றது.

மேலும்,

दैवे च वेदे च गुरौ च मन्त्रे तीर्थे महात्मन्यपि भेषजे च ।
श्रद्धा भवत्यस्य यथा यथान्तः तथा तथा बुद्धिरुदेति पुंसाम् ॥

'தெய்வம், வேதம், குரு, மந்திரம், புண்யதீர்த்தம், மஹான்கள், ஔஷதம் இந்த ஏழு இடங்களிலிருந்து பலத்தை அடைய வேண்டுமானல் தெய்வம் முதலானவைகளிடத்தில் இவனுடைய உள்ளத்தில் எவ்வளவு நம்பிக்கை அதாவது "இவைகளை யுபாஸித்தால் நிச்சயமாய் நமக்குப் பிரஸாதம் கிடைக்கும். சந்தேகமில்லை" என்கிற உறுதியான எண்ணம் இருக்கின்றதோ அதற்குத் தக்கவாறு சீக்கிரமாகப் பல ஸித்தியேற்படும், என்று சான்றோர் கருதுகின்றபடியால் சிரத்தை அவசியம் வேண்டும்.

4-ஆவது ஸாதனம் முமுக்ஷா-

முமுக்ஷை என்றால் எப்பொழுதும் துக்கத்திற்குக் காரணமான இந்த ஸம்ஸாரபந்தத்திலிருந்தும் விடுபட்டு நித்யானந்த ஸ்வரூபமாய் எப்பொழுதும் விளங்கும் பரமாத்ம ஸ்வரூபத்தை அடைய வேண்டும் என்கிற அதிகமான ஆவல்.

अहङ्कारादिदेहान्तबन्धानज्ञानकल्पितान् ।
स्वस्वरूपावबोधेन मोक्तुमिच्छामुमुक्षता ॥

அக்ஞானத்தால் கற்பிதங்களான அகங்காரம் முதல் தேகபரியந்தமுள்ள சகல பந்தங்களையும் ஆத்மஸ்வரூப ஞானத்தால் விலக்க வேண்டும் என்று உண்டாகும் இச்சைக்கு முமுக்ஷை என்று பெயர்.

साधनानां तु सर्वेषां मुमुक्षा मूलकारणम् ।
अनिच्छोरप्रवृत्तस्य क्व श्रुतिः क्व तु तत्फलम् ॥

இங்கு கூறப்பட்ட சகல ஸாதனங்களிலும் முமுக்ஷை என்பது முதன்மையான ஸாதனம். ஒன்றைப் பெறவேண்டு மென்கிற விருப்பமில்லாமலும், முயற்சியற்றவனுமாகிய ஒருவனுக்கு சாஸ்திரமேது? அதிற் கூறப்பட்ட பலம்தான் எப்படிக் கிடைக்கும்? இதுவரை வெளியிடப்பட்ட நான்கு ஸாதனங்களையும் பெற்றவன் இந்த சாஸ்திரத்திற்கு முக்கிய அதிகாரியாவான்.

இங்குச் சொல்லப்பட்ட ஸாதனங்களைப் பெற்றவன் இந்த சாஸ்திரத்திற்கு அதிகாரி என்பதை

प्रशान्तचित्ताय जितेन्द्रियाय च प्रहीणदोषाय यथोक्तकारिणे।
गुणान्वितायानुगताय सर्वदा प्रदेयमेतत्सततं मुमुक्षवे ॥

"விஷயங்களில் தன்னிஷ்டம்போல் ஓடாமல் மிகவும் அடங்கியிருக்கும் சித்தத்தை யுடையவனும், சகல இந்திரியங்களையும் ஜயித்துத் தனக்கு ஸ்வாதீனமாய்ச் செய்து கொண்டவனும், (இந்த இரண்டு விசேஷணங்களால் நித்யாநித்ய வஸ்து விவேகமும், இவ்வுலகிலும் பரலோகத்திலுமுள்ள பலங்களில் வைராக்கியமும் வேண்டுமென்கிற ஸாதனங்கள் கூறப்படுகின்றன.) (प्रहीणदोषाय) தோஷங்களற்றவனும், குருவாலும் சாஸ்திரங்களாலும் உபதேசிக்கப் பட்டபடி பக்தியாய் நடத்துகிறவனும், சமம் முதலான சகல குணங்களோடு கூடியவனும், (இதனால் மூன்றாவது ஸாதனமான (शमादिषट्कं) சமாதி ஷட்கம் வேண்டுமென்று அறிவிக்கப் படுகின்றது.) மோக்ஷத்தை யடையவேண்டு மென்கிற தீவிரமான இச்சையுடையவனும், சிறந்த பக்தியுடன் கூடியவனுமான அதிகாரியின் பொருட்டு இந்த சாஸ்திரத்தை யுபதேசிக்க வேண்டும் என்று ஒரு மஹான் சுருக்கமாய் வெளியிட்டிருக்கிறார். ஆகையால் இவற்றால் இங்குக் கூறப்பட்ட நான்குவித ஸாதனங்களையும் பூர்ணமாய்ப் பெற்றவன் வேதாந்த சாஸ்திரத்தின் உபதேசத்தைப் பெறுவதற்கு முக்கிய அதிகாரியாகிறானென்றும், அவனிடத்தில் சாஸ்திரார்த்தங்கள் நன்கு உபயோகப் படுகின்றனவென்றும், அவனே அதிற் கூறியவாறு பூர்ணமான பலத்தைச் சீக்கிரம் பெறுகிறானென்றும், பூர்ணஸாதன மில்லாதமந்தாதிகாரிகளுக்குக் காலக்கிரமமாகத் தான் பயனேற்படு மென்றும் அறிவிக்கப் படுகின்றது.

(தொடரும்)

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ராமச்சந்திரபுரத்தில் ஆசார்ய விஜயம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளவர்கள் தேவகோட்டை, காரைக்குடி முதலிய நகரத்தார்களின் ஊர்களில் ஆஸ்திகர்களது வேண்டுகோளுக்கிணங்கி ஆங்காங்கு விஜயம்செய்துவிட்டு, 4--3—25 புதனன்று இரவு சுமார் 10-மணிக்குக் காரைக்குடியை விட்டு அன்றிரவில் திருமயத்தில் தங்கி, காலையில் கடியாபட்டி, ராமச்சந்திரபுரம், விசுவனுதபுரம், கானப்பேட்டை முதலியவிடங்களிலுள்ள ஆஸ்திக மகாஜனங்களால் மரியாதையுடன் பூரணகும்பங்களுடனும் வாத்திய கோஷங்களுடனும் வேதகோஷங்களுடனும் அழைக்கப்பெற்று 12-மணி சுமாருக்கு ராமச்சந்திரபுரத்தில் ஸ்ரீ மகாஸ்வாமிகள் விஜயம்செய்தார்கள். இவ் விஜய வைபவத்தையும் ஆஸ்திக ஜனங்கள் திரள்திரளாய் கூடிக் குழுமிக்கொண்டு ஆனந்தகோலாகலம் செய்ததையும், வீதிகளில் விஜயம்செய்யும்போது அவர்கள் செய்த உபசாரத்தையும் தனித்தனி எழுதுவதென்றால் இது என் போன்ற அற்பபுத்திக்காரன் செய்யக்கூடிய காரியமல்லவென்று மட்டும் இதனை வளர்க்காது மேற்போகின்றேன்,

ராமச்சந்திரபுரமென்பது புதுக்கோட்டை ஸ்டேட்டைச் சார்ந்தது. திருமயம் என்ற ஊருக்குக் கிழக்கே 2-½மயில் தூரத்திலுள்ளது. கடியாபட்டி, விசுவனுதபுரம், கானப்பேட்டை என்னும் பெயருள்ள விடங்களெல்லாம் ஒன்றுசேர்ந்துதான் ராமச்சந்திரபுரத்தோடு ஒட்டியிருக்கிறது. கானப்பேட்டையில் அக்கிரகாரம் விசேஷமாய் இருக்கிறது. இக் கிராமமானது ஜகத்குருபட்டத்தில் விளங்கிக்கொண்டு ஞானியென்றும், யோகியென்றும் சகல ஜனங்களாலும் புகழப்பெற்று ஒரே சமயத்தில் காசியிலும், மதுரையிலும், கன்னியாகுமரியிலும் திருமேனியைக் கண்டதாய்க் கூறப்பெற்றவரும், கடைசியில் கரூருக்கடுத்த நெரூரில் மௌனஸமாதியிலடங்கியவருமான ஸதாசிவப் பிர்மத்தால் பிரதிஷ்டை செய்விக்கப்பெற்று, பிர்மவித்யா ஸமுத்திரமென்றும், திருநாமம் பெற்றதாயும் சொல்லப்படுகிறது. ஸதாசிவத்தால் பிர

திஷ்டை செய்யப்பெற்ற பூமீசுவரர் என்ற சிவஸன்னிதியும் பிர்ம வித்யாம்பாள் என்ற தேவிஸன்னிதியும் அவ்விடமுள்ள நகரத்துச் செட்டியார்களால் செய்யப்பட்டிருக்கும் விசேஷ ஆபரணம், வாகனம் முதலியவைகளோடு பிரகாசிக்கிறது. ஸ்ரீ மகாஸ்வாமிக ளவர்கள் கோவில் ஸமீபத்தில் ஈசானதிக்கில் இருக்கும் பெரிய சத்திரத்தில் விஜயம்செய்துகொண்டு திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவரரின் ஆராதனையை நடத்திக்கொண்டு ஏராளமாய் தரிசனத்திற்கும் தீர்த்தப் பிரஸாதத்திற்கும் கூடும் பக்தகோடிக ளின் மனோபீஷ்டத்தைப் பூரணம்செய்துகொண்டு அப்பிரதேசத் தையே கிருதயுகம் வந்துவிட்டதோவென்று நினைக்கும்படிசெய் துகொண்டு ஆனந்த பூர்ணர்களாய் விளங்கிக்கொண்டிருக்கின்ற னர். இம் மகான் விஜயம்செய்ததுமுதல் 3 நாள்மட்டும் பிக்ஷா கைங்கர்யத்தை ஸாமான்யமாய் அந் நகர்வாஸியான தர்மபூஷ ணம் முத்தையாசெட்டியாரவர்கள் நடாத்தினர். பிறகு கானப் பேட்டை அக்கிரகார மகாஜனங்கள் நடத்தினர். செவ்வாயன்று பௌர்ணமி யானதாலும் அன்று மகாஸ்வாமிகளவர்களுக்கு வபனதினமானதாலும் அதற்காக பக்கத்தில் 1½ மைல் தூரத்தி லிருக்கும் பாம்பாற்றுக்குப் புடை சூழ விஜயம் செய்து அங்கு நித்திய கன்மங்களை முடித்துக்கொண்டு சுமார் 9½ மணிக்கு திரும்பும்போது நடுவழியில் பிராமணர்களும் நகரத்தார்களும் வினயத்துடன் எதிர்கொண்டுசென்று பூரண கும்பம் ஸமர்ப் பித்து உபனிஷத் பாராயணத்துடன் ஜாகைக்கு அழைத்து வந் தனர். அங்கு அப்போது சந்திரமௌளீசுவர ஸன்னிதியில் திருச்சி தஞ்சைஜில்லாக்களி லிருந்து தருவித்த ஏராளமான புஷ்பங்களால் அமைக்கப் பட்டிருந்த திவ்ய புஷ்பந்தலில் நமது குரு மூர்த்தியும் அளவிலாவானந்தத்துட னமர்ந்தனர். இவ் விதம் புஷ்பக்கூடாரம் அமைக்கும்படி கைங்கர்யம் செய்ய ஈடு பட்டிருந்த தர்மபூஷணம் தீ. நா. முத்தையாசெட்டியாரவர்கள் அன்று பிக்ஷை நடத்துவதற்காகத் தயார் செய்துகொண்டு வணக்கத்துடன் தனக்கு ஆக்ஞை தந்தருள வேண்டுமென்று ஜகதாசாரியாளின் பாதகமலங்களில் நமஸ்கரித்து விக்ஞாபித்துக் கொண்டு வணங்கிநின்றனர். அவர் ஏராளமான லக்ஷ்மீ விலாஸ

முள்ளவராய் இருந்தும் இக்காலத்தில் இவ்வளவு தெய்வப் பிரா மண ஆசார்யபக்தியுள்ளவராயும் அடக்கமுள்ளவராயிருப்பது மிகவாச்சரியமென்று பார்ப்பார் கொண்டாடாதவரில்லை. இத்த கையதர்ம பூஷணத்திற்கு ஆசார்யாள் ஏன் வேண்டுகோளை நடத் தாமலிருப்பார்கள், அவ்விதமே உத்திரவிட்டனர். பிறகு ஆசார்ய பாதுகைகளில் ஸஹஸ்ரார்ச்சனை செய்வித்ததோடு ஆங்காங்கு நகரத்தார்களுக்குத் தெரிவித்துத் தருவிக்கப்பட்டிருந்த உறவி னர் உற்றத்தார் கூட்டத்துடன் பூஜை தீபாராதனை முடியுமட்டும் காத்திருந்து ஏராளமாய்த் தருவித்திருந்த புஷ்பம் பழம் வகை களால் ஆராதிக்கப் பெற்றதிரிபுரசுந்தரீ ஸமேத சந்திர மௌளீசு வரரை ஜன்மஸாபல்யமாகும்படி தியானித்து தரிசித்துப் பிறகு பிராமணர்களுக்குத் தீர்த்தப் பிரஸாதமானதும் தானும் மற்றவர் களோடு பெற்றுக் கொண்டு ஆனந்த மடைந்தனர். அப்புறம் நடந்த பிராமணஸந்தர்ப்பணையில் நடந்த விமரிசையையும் பதார் த்தங்களின் பிரிவையும் பற்றிச்சொல்ல ஆரம்பித்தால் **ब्राह्मणा भोजनप्रिया:** என்றபழமொழிக்கிணங்க என்னைப் பெரிய சாப்பாட்டு ராமன் என்று சொல்வார்களோ வென்று பயந்து நிறுத்திக் கொள்கிறேன். சுருங்கச் சொன்னால் பரதனுக்கு பரத்வாஜாச்ர மத்தில் இவ்விதம் சப்பனை நடந்திருக்குமா ? வால்மீகி வர்ணனைக் காக வெகுவாய் எழுதிவிட்டார் என்று சொல்லும்படி இருந்த தென்று அனுபவித்தவர்கள் நினைப்பார்கள். பிறகு இரவு 8 மணிக்கு ஸ்ரீ மகாஸ்வாமிகளை புஷ்பக விமானமோ வென்று நினைக்கத்தக்கதாய் திவ்யாலங்காரம் செய்யப்பெற்ற சிபிகையில் ஆரோகணிக்கச் செய்து ஊர்கோல வைபவத்தை மேற்படி செட்டியார் நடத்திவைத்தார்- ஒவ்வொரு செட்டியாரும் தன் தனது ஐசுவரியத்தையும் பக்தியையும் பொருத்து மகாஸ்வாமி களை உபசரித்தது மிக மெச்சத்தக்கது. முத்தையாசெட்டியா ரவர்கள் வீட்டு வாசலிலும் ஹால்களிலும் எலக்டிரிக் தீபாலயங் களும் கட்டடத்தின்வைபவமும் பார்ப்பவர்ஒவ்வொருவரும் நாம் இந்திரலோகத்திற்கு குரு கருணையால் அனுபாஸமாய் வந்து விட்டோம். இதோ தேவஸபை ! தேவஸபை இவ்வளவு அழ காய் இருக்கிறதா ! என்று பிரமித்து அக் கட்டடத்தையும் ஸ்ரீ

மகாஸ்வாமிகளின் மகிமையைப் பார்த்து ஆகா! பகவத்பாதருக்கு இந்திரன் தனது நாமத்தைச் சாற்றியதாய் சங்கரவிஜயங்களில் கேட்டோமே. அம்மகான் அவ்விந்திரபதத்தை எவ்விதம் உப போகித்தனரோ அறியோம். இதோ இப்போது நமது குருமூர்த்தி இந்திர வைபவத்துடன் நம்மை அனுக்கிரகிக்கிறாரென்றெல்லாம் எண்ணும்படி பரமானந்தவெள்ளமே ஓடியது. பிறகு செட்டியார் வீட்டுக்கப்புறம் செல்லும் போது ஏற்பட்ட வாண வேடிக்கைகள் செப்பத்தக்கதல்ல. ஒவ்வொரு அவுட் வாணமும் இடையின்றியே கிளம்பிய ஆகாயவாணங்களும் ஆகாயத்தில் வெடித்துப் புஷ்பமாரியாய்க் கொட்டுவதைப் பார்த்தால் வெகு தூரம் உயரக்கிளம்பி பூமிதேவி அமராவதியை திக்காரம் செய்து மந்தகாஸம் செய்வது போலும் இச்சமயம் பூமியே நீ என்னிலும் மேலானவள் தானென்று அமராவதியே புஷ்பமாரி பொழிவது போலுமே காணப்பட்டது. ஆகவே இவ்வளவு தூரம் சொன்னது எதற்காகவெனில் இக்காலத்தில் அநேக பிரபுக்கள் இகத்திற்குக் கூட ஸாதகமகாமல் பெயருக்காகவும் புகழுக்காகவும் ஏராளமாய்ப் பணத்தை வாரி வீசுகிறவர்கள் தான் அதிகமாயிருக்க இது மிக ஆச்சரியமென்பதற்கே. இவ்விதம் பரமாசார்யாளை உத்தேசித்துச் செலவிடும் ஆஸ்திகர்கட்கும் அதைக் கண்டுகளிக்கும் எம்போன்றவர்கட்கும் இகபரசுகம் கிடைப்பதற்களவெல்ல வென்பது எனது பூர்ணநம்பிக்கை.

स्थापयध्वमिमं मार्गं प्रयत्नेनापि हे द्विजाः ।
स्थापिते वैदिके मार्गे सकलं सुस्थितं भवेत् ॥

ஓ வேதியர்களே! சிரமப்பட்டாவது இவ்வைதிக மார்க்கத்தை நிலைநாட்டுங்கள். வைதிக மார்க்கம் நிலைத்தால் உலகில்யாவும் நிலைபெற்று நின்றுவிடும் என்று சூதஸம்ஹிதா வசனப்படி நமது லோகாசார்யர் அவ்விதம் வைதிக மார்க்கத்தையே நிலைநாட்ட வெண்ணித் திருவவதாரம் கொண்ட கருணாமூர்த்தியென்பதை யாவரும் ஒப்பவே ஆங்காங்கு விஜயங்களில் திவ்யோபன்யாஸங்களாலும் திவ்யதர்மப் பிரதிஷ்டையாலும் விஜயப்படுத்திக் கொ

ண்டு விஜயம் செய்கின்றார்கள். காரைக்குடியில் விஜயம் செய்தி ருக்கும்போது கோவிலூர் க்ஷேத்திரத்தில் வேதபாராயணத்திற் காக ஓர்நிதி ஏற்படுத்த விரும்புகிறோமென்று ஆஸ்திகர்கள் சிலர் பிரார்த்திக்க அதற்கிணங்கி நம்மகான் உடனே. 1005 ரூபாய் கொடுத்தருளினதும் அவ்வூரில் ஸந்தியாவந்தனத்தை வேதியச் சிறுவர்கள் செவ்வனவே செய்யக் கற்பிக்க 400 ரூபாயையும் ரா மேசுவரம் கும்பாபிஷேகத்திற்காக 500 ரூபாயையும் கோஹட் என்னுமிடத்தில் ஹிந்து மகம்மதியர் கலகத்தால் துன்புறும் குடும்பங்களுக்குதவும்படி 500 ரூபாயும் கொடுத்தது பிரகாசம். இம்மட்டல்ல பிரதிதினமும் விவாகத்திற் கென்றும் உபனயனத் திற்கென்றும் பிரார்த்திப்பவர்கள் அநேகர். இவர்களுக்கு யோக் கியதைக்குத் தகுந்தபடியும் வறுமையின் கொடுமையையும் அறி ந்து அனுக்கிரகிப்பதற்குக் கணக்கல்ல. இக்காலத்தில் உண்மை யாய் இம்மகான் வெளியில் விஜயம் செய்யாமல் மடத்திலேயே நிஷ்டையிலிருந்திருப்பார்களாயின் நம் வர்ணாசிரம தர்மமும் இதற்குள் சௌகர்யமாய் இளைப்பாற ஓர் இடம் தேடியிருக்கும் இம்மகான் இன்னும் 4-5-நாள் ராமசந்திர புரத்தில் விஜயம் செய் து பக்கத்திலுள்ள கிராமங்களில் சென்று விட்டுக் கூடியசீக்கிரம் புதுக்கோட்டைக்கு விஜயம் செய்யவேண்டுமென்று அவ்வூர் வாஸிகள் சாதகம்போல் கார்த்திருக்கின்றனர். சுபம்.

M. N. சுப்பிரமணிய சாஸ்திரீ.

ஹிந்துமததர்மம் 2-பிரகரணம்.

பிராமணர்களுக்கு சிகையின் முக்கியம்.

(108-வது பக்கத்தொடர்ச்சி)

(1) சிகையானது சாதாரணமாய் எல்லா சமயத்திலும் கெட்டியாய் முடியப்பட்டிருக்க வேண்டுமென்றும், அபரக்கிரி

யைக் காலங்களில் அவிழ்த்துவிடப் பட்டிருக்கவேண்டுமென்றும், இன்னும் சில அசந்தர்ப்பங்களில் கொஞ்சம் முடிந்தும் கொஞ்சம் அவிழ்த்துவிடப்பட்டுமிருக்க வேண்டுமென்றும், சில காலத்தில் முழுமொட்டை அடிக்கப்பட வேண்டுமென்றும்விதிக்கப்பட்டிருக்கிறது. சிகை விஷயத்தைப்போலவே நல்லது பொல்லாததான அநேக சந்தர்ப்பங்களில், தான் மதசம்பந்தமாய் செய்யும் கிரியைகள் சரியான பலன் தரும்பொருட்டுத் தேகத்தைப் பற்றின ஸம்ஸ்காரங்களை நடத்துவதற்கு முன்னாகவோ அல்லது நடத்தித்தீர்ந்த உடனேயோ கர்த்தா க்ஷவரம் செய்துகொள்ள வேண்டுமென்பதும் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கின்றது. அன்னிய தேசத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடாகிய முகக்ஷவர வழக்கமானது மிகவும் இழிவும் கேவலமும் கெடுதலுமான சாஸ்திரவிரோதமாயிருக்கிறது. இந்த துர்வாடிக்கையின் கருத்தை உட்புகுந்து விசாரித்தால் ஹிந்துவாயிருக்கவேண்டுமென்னும் ஆசையைக் கைவிடாத ஒருவன் அப்படிச் செய்வதைக் கவுரவமாய் உணரவேமாட்டான். எப்படி வேண்டுமென்றாலும் இஷ்டப்படி ஒருவன் செய்யலாமென்று கர்த்தாவிற்குச் சாஸ்திரம் இடங்கொடுக்கவில்லை. சாஸ்திரத்தின் விதிகளைக் கட்டாயம் அனுசரிக்கக் கடமைப்பட்டிருக்கிறான். 'ஹிந்துவாயிருக்கத் தனக்குச் சம்மதமேயில்லை யென்று நிராகரித்து விட்டவனை ஷை விதிகள் கட்டுப்படுத்த மாட்டா' என்பது நிச்சயமே. அப்படி நிராகரிக்காமல் இன்னும் ஹிந்துமத விதிகளில் நம்பிக்கை ஒட்டிக்கொண்டிருப்பவனுக்குத் தலை மயிரைக் கத்தரித்துக்கொண்டு முகக்ஷவரம் செய்துகொள்வது தப்பு என்பதை அவன் விசாரித்துத் தெரிந்துகொண்டானேயானால் அவன் தனக்கே அது நியாயமற்றது என்பது மனத்தில் படாமல்போகாது. அப்படிப்பட்டவன் தனது பிறப்புரிமையாகிய சுருதி ஸ்மிருதிகளுக்குக் கட்டுப்பட்டு உண்மையான ஹிந்துவாயிருக்க வேண்டும் பக்ஷத்தில் உடனே அவன்செய்த பிசகிற்குப் பிராயச்சித்தம் செய்துகொண்டு சூடாகர்மம் புதிதாய்ச் செய்துகொள்ள

வேண்டும். அதாவது உடனே குடுமி வைத்துக்கொள்ளவேண்டியது. குடுமிக்கலியாணம் ஆடம்பரத்துடன் செய்வதானது சிகை வைத்துக்கொள்வதின் முக்கியத்தைச் சிறு வயதிலேயே வற்புறுத்துவதற்காகவே.— குடுமியைத் தொடர்ச்சியாய்க் காப்பாற்றிவருவதைப் பரிக்ஷிப்பதற்காகவேதான் விவாகம் முதலிய சந்தர்ப்பத்தில் ஒரு கர்மத்தைத் தொடங்குமுன்பே மாப்பிளைக்குக் குடுமியில் புஷ்பத்தைச் சூட்டச்சொல்லிப் புரோகிதர் கட்டாயப் படுத்துகிறார். பிறகு தாய்தந்தையர்களுக்கு உத்தரகிரியைச் செய்யும் காலத்தில் "அபன:சோசிஷத்து" என்ற மந்திரத்துடன் பாதிக்குடுமியை முடிந்துகொண்டு, மறுபாதியை அவிழ்த்துவிட்டுக்கொண்டு பிரேதத்தை ஆசந்தியில் இடம்வலம் சுற்றச்சொல்லும் சந்தர்ப்பத்திலும் குடுமியைத் தொடர்ச்சியாய்க் காப்பாற்றி வருகிறதும் வாராததும் பரிக்ஷிக்கப்படுகிறதென்னலாம். மாதாபிதாக்களின் கருமம் செய்தாகும் காலம் வரையிலாவது சிகையை வைத்துக்கொண்டிருக்கிறானா என்பது பரிக்ஷிக்கப்படுகிறது. இதற்குள் வயதாகித் தலையில் வழுக்கைவிழுந்தால் தலையைக் கத்தரித்துக் கொள்ளும் அழகில் வைத்திருக்கும் பிரமையும் தானாய் நீங்கிப்போகிறது. சிகைவைத்துக் கொண்டால் விகாரமாயிருக்கும் என்ற ஒருவன் பயப்படநிமித்தமில்லை. ஏனென்றால் தனது குடுமியின் முழுலக்ஷணத்தை என்னதான் பெரிய கண்ணாடியின் எதிரில் பார்த்துக் கொண்டாலும் பின்னழகு முழுவதையும் தானே அவன் நேரில்பார்க்கச் சரிப்படாது. அவனுடைய நெருங்கிய பந்துக்கள் அவன் சிகையைப்பார்த்து வெட்கப்பட்டுக் கேலிசெய்வார்களோ என்ற பயமும் வேண்டாம். ஏனென்றால் அப்படிப்பட்ட சிகையை வெகுநாளாய் அவர்கள் பார்த்துப் பார்த்து அவர்களுக்குப் பழகிப் பிடித்துப் போயிருக்கிறது. சோழியர்களும், தீக்ஷிதர்களும் வைத்துக் கொண்டிருக்கும் சிகையையும் முடிந்து கொள்ளும் தினிசையும் அவர்களுடைய பந்துக்கள் பார்த்து அழகாயிருப்பதாய்ச் சிலாகித்துக் கொள்ளுகிறார்கள் அல்லவா? ஆகையால் ஹிந்துவல்லாதபுது ஏற்பாட்டுத் தலையைக் கண்டால் பந்துக்கள் எவ்வளவு அருவருக்

கிறார்களோ அவ்வளவு வழக்கமாயுள்ள குடுமித்தலையை நிந்திக்க மாட்டார்கள் என்பது நிச்சியந்தான். ஹிந்துக்குடும்பத்திலிருந்து தனக்குத் தெரிந்தோ தன்னையறியாமலோ நழுவிப்போயிருக்கும் சில புதிய சிநேகிதர்களும் ஹிந்துவல்லாதவர்களும் குடுமித் தலையை விரும்பார்களோ என்று பயப்படும் பக்ஷத்தில் அப்படிப் பட்ட நியாயம் தெரியாத நெறிதவறியவர்களின் மேல்எழுந்த வாரியான சிநேகவிச்வாசம் ஒரு பைசாக்கூடப் பெறமாட்டாது. அப்பேர்ப்பட்டவர்களின் சினேகமிருந்தும் பிரயோஜனமாகாது. ஹிந்துவல்லாத அன்னியர்கள் ஹிந்துக்களின் சிகையைக் கண் டால் வெறுக்கிறார்களென்றிருந்தால் அப்படி அன்னியர்கள் வெ றுப்பதானது ஹிந்துவிற்கு ஒருபெரிய அதிர்ஷ்டமென்று எண் ணவேண்டும். முகம்மதியர்கள் குடுமியில்லாது மொட்டையாயி ருப்பதுவும் காதலிக் பாதிரிமார்கள் குடுமியிருக்க வேண்டிய நடுத் தலையில் குடுமிப்பூவில்லைமாதிரி வழுக்கை பண்ணிக்கொண்டிருப் பதுவும் ஹிந்துக்களுடைய அதிர்ஷ்டத்தினாலே என்று எண்ண வேண்டும். அப்படிப்பட்ட அன்னியமதத்தார் எப்போது குடு மித்தலையை வெறுக்கிறார்களோ அப்போதே அவர்கள் குடுமி வைத்துக் கொளளப் போகிறதில்லை என்பது நிச்சயமாகிறது. அப்படி அவர்கள் ஹிந்துவின் குடுமியை வெறுப்பதானது ஹிந் துவிற்கடையாளமாகிய அறிகுறிகள் நன்கு காப்பாற்றப்பட ஒரு பத்திரமான வழியாயிற்று. ஒரு ஹிந்துவை நேரில்பார்த்த மாத்திரத்திலேயே அவனுடைய முகக்குறிகளால் அவன் ஹிந்து மதத்தைச் சேர்ந்தவனென்று சுளுவாய்க் கண்டறியலாம் ஒரு ஹிந்துவினுடைய தேகம் எங்கேயோ அனாதப்பிரேதமாய்க் கிட ந்தாலும் அதைஹிந்துவென்று குடுமியால் கண்டுபிடித்து அதை யநுசரித்து அவனுக்குத் தகனக்கிரியை நடத்தப்பட ஹேது வாகும். ஆரியஹிந்து வைதீகமதம் எவ்வளவு விசேஷ சிரேஷ்ட மானதோ அதை யொட்டியே அந்த ஹிந்துவினுடையதேகத் தோற்றமும் தனிமையான சிரேஷ்டத்தை அமையப் பெற்றிருக் கிறது. கேவலம் பூலோக மனிதவாழ்வின் தாழ்ந்த பௌதிக வாதக் கொள்கையைத் துச்சமெனத்தாண்டி ஆரிய ஹிந்துப் பயிற்சியால் மட்டும் சித்திக்கக்கூடிய சச்சிதானந்த நிலையின்

உயர்ந்த நோக்கத்திற்கு வழிதேடும் ஒரு தர்மமார்க்கத்தில் ஆவலையுடைய ஹிந்துவின் தேகத்திற்குத் தலைமேல் வைத்திருக்கும் சிகையானது ஒரு த்வஜம்போல் துலங்குவதாகச் சொல்லலாம்.

முன்காலத்தில் ஒரு ஹிந்துவினுடைய சாஸ்திரவிதியான சிகையை மொட்டையடிப்பதானது அவனுக்கு ஒருகடுமையான தண்டனையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிக் குடுமியை யிழந்து உலகத்திலும் தர்மவழியிலும் நிந்தையை அனுபவிப்பதைப் பார்க்கிலும் அவனுடைய சிகையை எடுக்காமல் தடுப்பதில் ரணவீரனுகச் சண்டைச் செய்து மாள்வதே மேலென்றெண்ணுவான். பிராணனை வாங்குவதற்குப் பதிலாய் ஒருவனுடைய சிகையை யெடுத்துவிடுவது வழங்கிற்றென்பதற்கு அச்வத்தாமருக்குச் செய்யப்பட்ட தண்டனையே சாக்ஷி யென்னலாம். இன்னமும் துன்மார்க்கனுக்குக் குடுமியை அறுத்து விடுவது ஒரு சரியான தண்டனையென்றும் குடுமி அறுபட்டவன் இழிவாயும் நாளது வரையில் எண்ணப்படுகிறுன். தண்டனைப் பட்டு ஒருவன் ஜயிலிற்குப்போய் நுழைந்ததும் அவனது தலைமயிரைக் கத்தரித்து விடுகிறுர்கள். இஷ்டானுசாரம் கண்டபடி திரியும் பிராமணர்களுக்குள் தற்காலம் நடந்துவரும் தலைக்கத்தரித்துக் கொள்ளும் வழக்கமானது அனேகமாய்த்தெரியாத்தனத்தினுலேயே ஒழியவேண்டு மென்று அடத்துக்குச் செய்யும் காரியமாய்த் தோற்றவில்லை. நியாயத்தையும் சாஸ்திரத்தையும் அவர்களுக்குச் சரியாய் எடுத்து போதிக்கும் பக்ஷத்தில் அப்பேர்க்கொத்த நடவடிக்கைகளை அவர்கள் செய்யவே மாட்டார்கள். இனி அப்படிச் செய்வோரையும் செய்து கெட்டுப்போகாமல் நாம் தடுக்க இயலும். இப்படி இயலுமென்ற நம்பிக்கையைக் கொண்டேதான் நான் உண்மையை ஒளியாமலும், கூசாமலும் நேருக்கு நேர் உங்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அப்படி நான் சொல்வதானது முகத்தை விகாரப்படுத்திக்கொண்டாயிருக்கும் என்னுடைய சிறிய பெரிய சிநேகிதர்களுடைய மனதில் சுருக்கென்று கோபம் வருமாயிருக்கலாமானுலும் உண்மையைத் தெரிந்துகொண்ட பிறகு தான் செய்த பிசகைத் திருத்

திக்கொண்டு நல்வழிக்குத் திரும்பும்படி அவர்களிற் சிலரையா வது நான் சொல்லியிருப்பது தூண்டிவிடலாம். தலையைக் கத் தரித்துக் கொள்வதற்குக் காரணம் அதினாலுண்டாயிருக்கும் சௌகரியமும் தேக சுகமுமே என்று சிலர் வாதிப்பதானது யுக்திக்கொவ்வாத சிறுபிள்ளைத்தனமேயாகும். அப்படிச் செய்து கொள்ளாமல் முன்னிருந்த பூர்வீகர்களைக் காட்டிலும் நவீன நடத்தையுள்ள பிராமணன் பலம் அதிக முள்ளவனாக இருக்கி றானா? இப்படிச் சௌகரியத்தையும் தேகசௌக்கியத்தையும் தனது தலையைக் கத்தரித்துக்கொண்டதற்கு ஒரு சாக்காகச் சொல்லிக்கொள்ளும் பிராமணன், தான் புதிதாய் க்கண்டுபிடித்த உபாயத்தை தனது மனைவிக்கும் புத்திரிக்கும் சவுக்கியமுண்டாக வேண்டி அவர்களிடத்திலும் அந்தத் தலையைக் கத்தரித்து பரீ க்ஷையைச் செய்யச் சம்மதிப்பானா? ஒருக்காலும் சம்மதிக்க மாட்டானென்பது நிச்சயமே.

2. சிகையின் முக்கியத்தைப்பற்றி சாஸ்திரங்களில் கண்ட விதிகள் இங்கு என்னால் எடுத்து விபரமாய்ச் சொல்லப்பட்டிராத போதிலும் சாதாரணவெளித்தோற்றத்தைப்பற்றினமட்டிலாவது என்னால் சொல்லப்பட்டது. அதற்கு மேல் ஜாஸ்தியாய் சிகை யைப்பற்றிவிவரிப்பது அனாவசியம். மொத்தத்திலுண்மையான ஒவ்வொரு ஹிந்துவிற்கும் சிகையானது முக்கியம். அதனால் தான் **शिखिन्** என்ற பதத்திற்கே பிராமணன் என்ற அர்த்தம் வந்திருக்கிறது. வேறு மதத்திற்கு மாறினவனுக்கும் அல்லது ஹிந்து தர்மங்களை ஒழித்துக் கை விட்டவனுக்கும் சிகையை எடுத்து விடுவது மிகவும் உத்தமம். அப்படிச் சிகையை எடுத்து விடச் சொல்லி நாமே அவனுக்குத் தைரியப் படுத்தலாம். ஆகை யால் பிராமணரென்று பேர் மாத்திரம் வைத்துக்கொண்டு தகப் பன் முதலான முன்னோர் தர்மத்தை அனுசரிக்காமல் அலக்ஷ்யம் செய்துவிட்டிருக்கும் போலிப் பிராமணர்கள் ஒருவர் கூடத் தப் பாமல் தாராளமாய்ச் சிகையை எடுத்து விடட்டும். அப்படிச் செய்தால் தான் மீதியிருக்கும் உண்மையான ஹிந்து ஜன சமூ கர்களிலிருந்து அவர்களை அடையாளமாய்ச் சுளுவாய்க் கண்டு

கொள்ளலாம். தலைக்கதத்தரிப்புப் பிராமணாள் எங்கும் நாளுக்கு நாள் அதிகரிப்பதானது பல திக்குகளில் பிராமாண்யம் வரவரக் குறைந்து வருகிறதைச் சூசிப்பிக்கின்றது. இந்தப்படி அவர்கள் அதிகரித்தால் இன்னும் சில காலத்திற்கும் சிகை வைத்திருக்கும் பிராமணர்கள் துர்லபமாய் விடுவார்களோ என்ன தெரியவில்லை. சிற்சில பிராமணர்கள் மட்டும் தற்காலம் அலக்ஷியம் செய்யப்பட்டதும், உலகம் தோன்றினது முதலுள்ளதுமான பிர்ம்மபராம்பரையின் வழக்கங்களை ஒட்டிப்பிடித்துக் கொண்டு இடைஞ்சலதிகரித்துக் கொண்டிருக்கும் இல்வாழ்கையிலிருந்து கொண்டும் இந்த ஜன்மத்தில் அல்லது மறு ஜன்மத்திலாவது தப்பிக்கடைத்தேற வழி பிறக்காதாவென்று நம்பி அங்கு மிங்கும் சிதறி வஸித்துக்கொண்டிருப்பார்கள் என்று நாம் எதிர் பார்க்க வேண்டியிருக்கிறது.

(தொடரும்)

ராவ்ஸாஹேப். எல். ஏ. ரேங்கஸாமி அய்யர்.

வர்ணாச்ரமம்.

(ஜாதிப்பிரிவினை)

நம் தேயத்தின் ராஜீய முன்னேற்றத்தை விரும்புகிறவர்களில் சில வகுப்பார்களாலும், ஆசாரத்திருத்தக்காரர்களாலும், பிரும்மக்ஞான சங்கத்தார்களாலும் இப்பிரிவினை ஒரு இடைஞ்சலாகக் கருதப்படுகிறது. வகுப்பு பேதம் கூடாதென்பவர்கள் தேசக்ஷேமத்தில் அக்கரைப்பட்டு பொது நலத்துக்காக உழைப்பவர்கள். ஆகையால் இவர்கள் சொல்வதில் உண்மையிருக்கிறதாவென்று பரிசீலனைசெய்ய வேண்டியிருக்கிறது. இவர்களை மூன்று பிரிவாக்கலாம்.

முதலாவது:— சாஸ்திரங்களும் ஸ்மிருதிகளும் ஒருதலைப் பக்ஷமாய் எழுதப்பட்டவை; மேலும் அவைகளை காலநிலைக்குத் தக்கபடி மாற்றிக்கொள்ளலாம்; என்பவர் சிலர்.

இரண்டாவது:— நமது சாஸ்திரப்படியே பிறப்பினால் ஜாதிப்பிரிவினை கிடையாது; ஒவ்வொரு மனிதனின் ஸ்வபாவம் நடவடிக்கை இவைகளைப் பொறுத்து அவனவன் ஜாதியை நிச்சயிக்க வேண்டும், என்பவர் சிலர்.

மூன்றாவது:— நான்குவர்ணாசிரமங்கள்தான் ஏற்பட்டவை. ஐந்தாவது வகுப்புக் கிடையாது. அப்படி ஒரு சாராரைப் பிரித்து வைத்திருப்பது பெருத்த அநியாயம் என்பவர் மற்றும் சிலர்.

இத்தேசத்திய முக்கிய ராஜீய சபையாகிய காங்கிரஸ் சபையின் மூன்று முக்கிய நோக்கங்களில், "தீண்டாமையை ஒழிப்பதும்" ஒன்றாக, சென்ற வருஷத்திய அதன் அக்கிராசனரான, மஹாத்மாவெனப் போற்றப்படும் காந்தியவர்கள் வற்புறுத்தியிருக்கிறார்............ராஜீய சபையில் இம்மாதிரி பிரச்னையை யெழுப்புவது நியாயமா? என்பதை இங்கு விவாதிக்க விரும்பவில்லை. (மகாத்மா) காந்தியவர்கள் மேற்சொன்ன மூன்று வகுப்புகளில் எதில் சேர்ந்தவர் என்பது இது வரை விளங்காமலிருந்தது. சென்றசில தினங்கட்குமுன் இவராலியற்றப்படும் "யௌவன இந்தியா" வென்னும் பத்திரிக்கையில் கேள்வி—பதில் ரூபமாக வெளியிடப்பட்ட இவருடைய அபிப்பிராயங்களிலிருந்து, இவரை மூன்றாவது வகுப்பில் சேர்க்கவேண்டு மென்று தோற்றுகிறது.

(தொடரும்)

வா. பஞ்சாபகேசய்யர்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.